பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

31 05 2025 **SATURDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பஹல்காமில் மகளிர் சக்திக்கு எதிராக தீவிரவாதிகள் விடுத்த சவாலுக்கு தக்க பதிலடி தரப்பட்டதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நாடு முழுவதிலும் உள்ள மக்கள் மருந்தகங்களில் தன்னார்வ இளையோருக்கான 15 நாள் அனுபவ பயிற்சி முன்னோடித் திட்டம் நாளை தொடங்குகிறது.

3. தமிழகத்தில் மழை காலத்தில் டெங்கு காய்ச்சல் ஏற்படாமல் தடுக்க அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் வரும் ஐந்து நாட்களுக்கு ஒரு சில பகுதிகளில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Kaliyanda Poonacha - Nedunchezhian** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<<>>>>>

பஹல்காமில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல், நாட்டின் மகளிர் சக்திக்கு விடுத்த சவால் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

லோக் மாதா தேவி அஹில்யாபாயின் 300-ஆவது ஜெயந்தியையொட்டி, ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் மகா சம்மேளன் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை மூலம், நாட்டின் வலுவான மகளிர் சக்தி தீவிரவாதிகளை மண்டியிட வைத்ததாக கூறினார்.

எந்தவொரு மறைமுகமான போரையும் இந்தியா பொறுத்துக்கொள்ளாது என்றும், உறுதியுடன் பதில் தாக்குதல் தர எப்போதும் நமது முப்படைகளும் தயார் நிலையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் வீர தீரத்தின் சின்னமாக ஆபரேஷன் சிந்தூர் விளங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

பஹல்காம் தாக்குதலில் மகளிர் சக்திக்கு எதிராக தீவிரவாதிகள் விடுத்த சவாலுக்கு தக்க பதிலடி தரப்பட்டதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் எல்லையிலிருந்து பல நூறு கிலோமீட்டருக்கு அப்பால் உள்ள எதிரிகளின் முகாம்களையும், அவர்கள் பதுங்கியிருந்த இடங்களையும் துல்லியமாக தாக்கி அழித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் வரலாற்றில் ஆபரேஷன் சிந்தூர் மாபெரும் வெற்றி என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

தீவிரவாதிகளின் துப்பாக்கி குண்டுகளுக்கு, பீரங்கி குண்டுகள் மூலம் பதிலடி தரப்பட்டதை நாட்டின் 140 கோடி மக்களும் புரிந்துகொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தீவிரவாதிகளை அவர்களின் சொந்த மண்ணிலேயே அழிக்கவும், அவர்களுக்கு ஆதரவு தருபவர்களுக்கு உரிய விலையை கொடுக்கவும் இந்தியா தயாராக இருப்பதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

மத்திய அரசின் இளையோர் விவகாரங்கள் துறையும், மருந்துகள் உற்பத்தி மற்றும் கட்டுப்பாட்டுத்துறையும் இணைந்து 15 நாள் மக்கள் மருந்தக அனுபவ பயிற்சி முன்னோடித் திட்டத்தை நாளை தொடங்குகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஐந்து மக்கள் மருந்தகங்கள் தெரிவு செய்யப்பட்டு, ஐந்து தன்னார்வ இளைஞர்கள் பயிற்சிக்காக அனுப்பிவைக்கப்பட உள்ளனர்.

மக்கள் மருந்தகங்களின் அன்றாட நடவடிக்கைகளில் அவர்கள் பங்குபெற்று மருந்துகளை விற்பனை செய்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுவான மருந்துகள் குறித்த விவரங்களை தெரிந்துகொண்டு, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது, பொது சுகாதாரம் குறித்த தகவல்களை அளிப்பது போன்ற பணிகளில் அவர்கள் ஈடுபடுவார்கள்.

இளம் தன்னார்வலர்களை மக்கள் மருந்தகங்களில் இணைப்பதன்மூலம், அவற்றின் சேவைகள் மேம்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் ஏற்படாமல் தடுக்க அனைத்து மாவட்டங்களிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நடப்பாண்டில் இதுவரை நான்கு உயிரிழப்புகள் மட்டுமே டெங்கு காய்ச்சலால் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கோவிட் தொற்று தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், தமிழகத்தில் தற்போது வீரியம் இழந்த ஓமைக்ரான் வகை கோவிட் பாதிப்பு மட்டுமே காணப்படுவதாகவும், இதனால் எவ்வித பாதிப்பும் இல்லை என்றும் தெரிவித்தார்.

பொதுமக்கள் கூட்ட நெரிசலான இடங்களுக்கு செல்லும்போது, முகக்கவசம் அணிய வேண்டும் என்றும், இருமும்போது சரியான சுகாதார வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

காய்ச்சல் மற்றும் சுவாச மண்டலத்தில் தொற்றுக்கான அறிகுறிகள் உள்ளவர்கள் குறிப்பாக இணை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறும் அமைச்சர் அறிவுறுத்தினார்.

கோவிட் பரவலால் பாதிப்பு இல்லை என்ற போதிலும், மாநில அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தெரிவித்த திரு மா. சுப்பிரமணியன், பொதுமக்கள் இதுகுறித்து அச்சப்பட தேவையில்லை என்றும் கூறினார்.

<<<<<<<>>>>>>

கன்னியாகுமரி மாவட்டத்தில் கனமழை மற்றும் சூறாவளி காற்றால் பாதிக்கப்பட்ட மலையோர கிராமங்களில் மாநில அமைச்சர் திரு சிவசங்கர் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் கோடை மழை முன்னதாகவே தொடங்கியதாகவும், சூறைக்காற்று வீசியதால் விவசாய நிலங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் கூறினார்.

பெரிய மரங்கள் விழுந்ததன் காரணமாக, 565 மின் கம்பங்கள் சாய்ந்துள்ளதாக கூறினார்.

இதில் 443 மின் கம்பங்கள் சரி செய்யப்பட்டுள்ளதாகவும், ஒரு சில இடங்களில் மின் விநியோகம் வழங்குவது சற்று தாமதமடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

நாளை காலைக்குள் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு, மின் விநியோகம் அனைத்துப்பகுதிகளிலும் சீரடையும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

சேலம் மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழையின்போது பாதிப்பு ஏற்படக்கூடிய இடங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாநில அமைச்சர் திரு ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற தென்மேற்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் பேசிய அவர், மேட்டூர், எடப்பாடி, ஆத்தூர், நரசிங்கபுரம் மற்றும் சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட சில இடங்களிலும் மழை பாதிப்பு குறித்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளதாக கூறினார்.

மேட்டூர் அணையிலிருந்து இரண்டு லட்சத்து 50 ஆயிரம் கனஅடிக்கு மேல் தண்ணீரை வெளியேற்றக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் உடனடியாக எடுக்கப்படும் என்றும் அமைச்சர் திரு ராஜேந்திரன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் இன்று தொடங்கிய தேசிய நெல் திருவிழாவில் 174 வகையான பாரம்பரிய நெல் வகைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

இந்த நெல் திருவிழாவில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து இயற்கை முறையில் சாகுபடி செய்யும் ஏராளமான விவசாயிகள் கலந்துகொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***Sound Byte – விஜயகுமார் - 30 Sec.)***

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் வரும் ஐந்து நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

இன்று எமது செய்தியாளரிடம் பேசிய அவர், மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் மழையின் தீவிரம் வரும் ஐந்து நாட்களுக்கு குறையக்கூடும் என்றும் தெரிவித்தார்.

***(Voice Byte - செந்தாமரை கண்ணன் - 45 Sec.)***

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தூத்துக்குடி மாவட்டம் வல்லநாட்டில், சுதந்திரப்போராட்ட வீரர் வீரன் வெள்ளையத்தேவனின் 256-ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, அன்னாரது மணிமண்டபத்தில் உள்ள திருவுருவச்சிலைக்கு ஆட்சியர் திரு இளம்பகவத் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

-------

கோவை மாவட்டத்தில் பள்ளி கல்லூரிகளுக்கு அருகே தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சியர் திரு பவன்குமார் எச்சரித்துள்ளார்.

--------------

தருமபுரியில் சைபர் குற்றங்களை தடுப்பது குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு சதீஷ் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பாலின சமத்துவம், பெண்களுக்கு அதிகாரமளித்தல் குறித்து மாவட்ட அளவிலான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

----------------

கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறை அணையினை ஆட்சியர் திருமதி அழகுமீனா இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

-----------------

திருச்சி மாவட்டம் துறையூரில் காணாமல் போன சுமார் 5 லட்சம் ரூபாய் மதிப்பிலான செல்போன்களை காவல்துறையினர் மீட்டு இன்று உரிமையாளர்களிடம் ஒப்படைத்தனர்.

------------------

நெல்லை மாவட்டம் பணகுடி அருகே விவசாய நிலத்தில் இருந்த அரிய வகை எறும்பு திண்ணி மீட்கப்பட்டு வனப்பகுதியில் விடப்பட்டது.

----------------

சேலம் மாவட்டம் கொங்கணாபுரம் வாரச்சந்தையில் பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு ஏழு கோடி ரூபாய் அளவிற்கு ஆடு விற்பனை நடைபெற்றது.

**<<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Kaliyanda Poonacha - Nedunchezhian** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 2-6, 6-2, 11-9 என்ற செட் கணக்கில், நியூசிலாந்தின் **Finn Reynolds – James Watt** இணையை வென்றது.

--------------

ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று 3 வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

**<<<<<<<END>>>>>>**